4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் **திரு.M.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்.,** 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

அ.வ.எண். 675/2023 நாள்: 12.11.2025 வா.சா.1 – செந்தில் அரசு

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

எனது சொந்த ஊர் சின்னவீரம்பட்டி. நான் பிறந்தது முதல் மேற்படி ஊரில் தான் வசித்து வருகிறேன். தற்போது நான் விவசாயம் செய்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன் என்பதை காட்டுவதற்கு நீதிமன்றத்தில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், நான் JCB, Tractor, மாடு ஆகியவைகளை வைத்து தொழில் செய்து வருகிறேன். JCB, Tractor ஆகியவை என் பெயரில் உள்ளது என்பதை காட்டுவதற்கு நீதிமன்றத்தில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 3வது பிரதிவாதி சுப்பிரமணியத்திற்கும், எனக்கும் இந்த வழக்கு வரவு செலவிற்கு முன்பாக வரவு செலவு எதுவும் எங்களுக்குள் கிடையாது. 3வது மற்றும் 4 வது பிரதிவாதிகள் எனக்கு உறவு கிடையாது, செல்வராஜ், காளிமுத்து என்பவர்கள் மூலமாக தாக் அவர்கள் பழக்கம். மேற்படி செல்வராஜ் கடனுறுதி சீட்டில் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார் என்றும், கடனுறுதி சீட்டை எழுத்தர் என்ற முறையில் காளிமுத்து எழுதிய மேற்படி கடனுறுதி சீட்டில் காளிமுத்து கையொப்பம் போட்டுள்ளார் என்றால் சரிதான். 3 மற்றும் 4 பிரதிவாதிகள் வீட்டிற்கு நான் சென்றதில்லை. பிரதிவாதி எனக்கு கடன் வாங்குவதற்கு முன்பாக பழக்கம் கிடையாது, கடன் வாங்கிய பிறகு தான் பழக்கம். தனலெட்சுமி ஸ்போர்ட்ஸ் எந்த ஊரில் உள்ளது என்றால் சாமிநாதபுரத்தில் உள்ளது. நான் சாமிநாதபுரத்திற்கு சென்றதில்லை. மேற்படி நிறுவனத்தில் என்ன தயார் செய்கிறார்கள் அதனுடைய நிதிநிலைமை என்ன என்பது பற்றி நான் கடன் கொடுப்பதற்கு

முன்பு அறிந்து கொள்ளவில்லை என்றால் சாட்சி 3 மற்றும் 4 பிரதிவாதிகளின் உறவுக்காரர்கள் மூலமாக மேற்படி விவரங்களை தெரிந்து கொண்டதாக கூறுகிறார். மேற்படி பிரதிவாதிகளின் உறவுக்காரர்கள் யார் என்றால் சாட்சி செல்வராஜ், காளிமுத்து என்று கூறுகிறார். மேற்படி காளிமுத்து மற்றும் செல்வராஜ் ஆகியோர்கள் 3வது பிரதிவாதி மீது இந்த நீதிமன்றத்தில் ஒரு கடன் தொகை திரும்ப கேட்டு ஒரு வழக்கும், சார்பு நீதிமன்றத்தில் ஒரு வழக்கும் தனிதனியாக தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் கடன் கொடுப்பதற்கு முன்பாக தனலெட்சுமி ஸ்போர்ட்ஸ் நிறுவனத்தின் ஆவணங்களை நான் படித்து பார்க்கவில்லை. மேற்படி தனலெட்சுமி ஸ்போர்ட்ஸ் நிறுவனத்தில் யார் யார் பங்குதாரர்கள், யார் அதன் மேலாளர் என்ற விவரத்தை நான் விசாரித்து தெரிந்து கொண்டேன். மேற்படி 1வது பிரதிவாதி நிறுவனம் இருக்கும் இடம் யார் பெயரில் வருவாய் துறையில் உள்ளது என்று நான் விசாரித்து தெரிந்துகொண்டேன். 3வது பிரதிவாதி, 1வது பிரதிவாதிக்காகவும், 4வது பிரதிவாதிக்காகவும் கடன் வாங்குவதற்கு அதிகாரம் இருக்கிறதா என்று கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் ஆவணங்களை பார்த்து தெரிந்து கொள்ளவில்லை, வாய் மொழியாக கேட்டு தெரிந்து கொண்டேன். கடனுறுதி சீட்டில் சாட்சி கையொப்பம் போட்டுள்ள செல்வராஜ் எனக்கு மாமா உறவு முறை உள்ளவர். கடனுறுதி சீட்டை எழுதிய எழுத்தர் காளிமுத்து எனக்கு மாமா முறை உள்ளவர். நான் கடன் கொடுத்ததாக சொல்லப்படும் தேதியில் 1வது பிரதிவாதி நிறுவனத்தை 3 மற்றும் 4 பிரதிவாதிகள் நிர்வகித்து வந்தார்கள். நான் சொல்வது போல் கடன் கொடுத்ததாக சொல்லப்படும் தேதியில் 1வது பிரதிவாதி நிறுவனத்தை 3 மற்றும் 4 பிரதிவாதிகள் நிர்வகிக்கவே இல்லை என்றால் சரியல்ல. மேற்படி 1வது பிரதிவாதி நிறுவனத்தை 3 மற்றும் 4 பிரதிவாதிகள் நிர்வகித்து வந்தார்கள் என்று மேற்படி காளிமுத்து, செல்வராஜ் ஆகியோர்கள் சொல்லிதான் எனக்கு தெரியும் என்றால் சாட்சி அவர்களும் சொன்னார்கள், 3 மற்றும் 4 பிரதிவாதிகளும் சொன்னார்கள். நான் 1வது

பிரதிவாதி நிறுவனத்திற்கு சென்று யார் நிர்வகிக்கிறார்கள் என்று நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். 3வது பிரதிவாதி என்னிடம் வந்து எப்போது கடனை கேட்டார் என்றால் சாட்சி கடன் கொடுப்பதற்கு 4 நாட்களுக்கு முன்பாக என்னிடம், செல்வராஜிம், காளிமுத்துவும் 3வது பிரதிவாதி கடன் கேட்பதாக என்னிடம் சொன்னார்கள், 3 மற்றும் 4 பிரதிவாதிகளுக்கு மேற்படி செல்வராஜிம், காளிமுத்துவும் உறவுக்காரர்கள். 3 மற்றும் 4 பிரதிவாதிகள் நேரடியாக என்னிடம் நான் கடன் கொடுப்பதற்கு முன்பாக வந்து என்னிடம் கடன் கேட்கவில்லை என்றால் சரிதான். நான் கடன் கொடுப்பதற்கு முன்பாக 3வது பிரதிவாதிக்கு என்ன குடும்ப செலவு, என்ன வியாபார செலவு இருக்கிறது என்று விசாரித்து தெரிந்த கொள்ளவில்லை என்றால் சாட்சி பேப்பர் மில்லுக்கு செலவு என்று சொன்னார்கள், குறிப்பாக என்ன செலவு என்று விசாரித்து தெரிந்துகொள்ளவில்லை. 3வது பிரதிவாதியின் குடும்ப செலவு என்ன என்று நான் விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை. நான் 3வது பிரதிவாதிக்கு கொடுத்த கடன்தொகையை எந்த வங்கியில் இருந்து எடுத்துகொடுத்தேன் என்றால் சாட்சி தான் ரொக்கமாக வைத்திருந்ததாக கூறுகிறார். எனக்கு மேற்படி ரொக்க பணம் விவசாயம், JCB, Tractor ஆகியவற்றை வாடகைக்கு விடுவதாலும், ஆடு, மாடு பண்ணைகள் வைத்துள்ளது மூலமாகவும் எனக்கு கிடைத்தது. எனக்கு மேற்கண்டவாறு ரொக்க பணம் வருவதற்கு வருமானம் எதுவும் இல்லை என்றும், மேற்படி தொழில்கள் இருந்தால் அதற்கான ஆவணத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றும், நான் கடன் கொடுக்கும் அளவிற்கு வசதி இல்லாதவன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆன கடனுறுதி சீட்டில் 4வது பிரதிவாதிக்காவும், கடன் வாங்குவதாக 3வது பிரதிவாதி எழுதி கொடுத்ததாக இல்லை என்றால் சாட்சி 1வது பிரதிவாதி நிறுவனத்தில் 3 மற்றும் 4 பிரதிவாதிகள் பங்குதாரர்கள் என்று கூறுகிறார். வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டில் 3வது பிரதிவாதி 1வது பிரதிவாதி நிறுவனத்தின் பங்குதாரர் என்று தான் குறிப்பிட்டுள்ளார், மேலாண்மை பங்குதாரர் என்று குறிப்பிட்டு எழுதவில்லை

என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டை பிரதிவாதிகள் தான் வாங்கிகொண்டு வந்தார்கள். கடன் வாங்கிய தேதியன்று 3 மற்றும் 4 பிரதிவாதிகள் கடன் வாங்குவதற்காக எனது வீட்டிற்கு காலை 10 மணிக்கு வந்தார்கள். நான் கடன் கொடுப்பதற்கு முன்பாக 3 மற்றும் 4 பிரதிவாதிகளிடம் போன் மூலமாகவோ, நேரடியாகவோ பேசினேனா என்றால் சாட்சி செல்வராஜ், காளிமுத்து ஆகியோர்கள் மூலமாக பேசினார்கள் என்று கூறுகிறார். 3 மற்றும் 4 பிரதிவாதிகளின் வீட்டை செல்வராஜ் என்பவர் இடித்து சேதப்படுத்தியதாக, 3வது பிரதிவாதி கொடுத்த புகாரின் அடிப்படையில் சாமிநாதபுரம் காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த விவரம் எனக்கு தெரியாது. நான் கடன் கொடுத்த பிறகு 3 மற்றும் 4 பிரதிவாதிகளை போன் மூலமாகவோ, நேரடியாகவோ தொடர்பு கொண்ட விவரத்தை என்னுடைய வழக்குரையிலோ, முதல் விசாரணை சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் உண்மையிலேயே கடன் கொடுத்திருந்தால் நான் நேரடியாகவோ, போன் மூலமாகவோ 3 மற்றும் 4 பிரதிவாதிகளை தொடர்பு கொண்டிருப்பேன் என்றும், எந்ததெந்த தேதியில் தொடர்பு கொண்டேன் என்ற விவரத்தையும் நான் சொல்லியிருப்பேன் என்றும், நான் அவ்வாறு சொல்லாததால், நான் கடன் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. கடன் கொடுத்ததாக சொல்லப்படும் தேதிக்கு பின்னிட்டு 3 மற்றும் 4 பிரதிவாதிகளிடம் எவ்வளவு தொகை வட்டி பெற்றேன் என்றால் சாட்சி கடன் கொடுத்ததில் இருந்தே மேற்படி நபர்கள் வட்டி தரவில்லை என்று கூறுகிறார். 25.07.2023 அன்று 3வது பிரதிவாதி என்னை அணுகி ரூ.10 லட்சம் மதிப்புடைய காசோலையை என்னிடம் தந்தார். மேற்படி காசோலை மூலமாக நான் கொடுத்த அசலுக்கு வட்டி பற்றி எதுவும் 3வது பிரதிவாதி என்னிடம் சொல்லவில்லையா என்றால் சாட்சி முதலில் காசோலை தொகையை பெறுங்கள், பின்னிட்டு வட்டியை தருவதாக என்னிடம் சொன்னார். மேற்படி விவரத்தை நான் என்னுடைய வழக்குரையிலும், சத்திய பிரமாண முதல் விசாரணை வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான்

சொல்வது போல், சொல்லவில்லை, வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 25.07.2023 அன்று 3வது பிரதிவாதியுடன் 4வது பிரதிவாதியும், செல்வராஜிம், காளிமுத்துவும் என் வீட்டிற்கு வந்தார்கள். காசோலையை காளிமுத்து தான் நிரப்பினார் என்றால் சரிதான். ஏற்கனவே செல்வராஜ் கைவசமிருந்த காசோலையை செல்வராஜ் என்னிடம் கொடுத்தார் என்றால் சரியல்ல, 3வது பிரதிவாதி தான் என்னிடம் கொடுத்தார் என்று சாட்சி கூறுகிறார். சின்னவீரம்பட்டி, ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வங்கி கிளையின் கணக்கை தொடங்கி 6 முதல் 7 வருடங்கள் இருக்கும். காசோலையை 3வது பிரதிவாதி தந்த பிறகு நான் கடனுறுதி சீட்டை எப்போது திரும்ப 3வது பிரதிவாதியிடம் கொடுத்தேன் என்றால் காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்து, பணம் வந்த பிறகு தான் நான் கடனுறுதி சீட்டை கொடுக்க முடியும் என்பதால் நான் அப்போது கடனுறுதி சீட்டை 3 மற்றும் 4 பிரதிவாதிகளிடம் கொடுக்கவில்லை என்று சாட்சி கூறுகிறார். 3 மற்றும் 4 பிரதிவாதிகள் என்னிடம் கடன் வாங்குவதற்காக எனது வீட்டிற்கு எப்போது வருகிறார்கள் என்ற விவரத்தை செல்வராஜிம், காளிமுத்துவும் எப்போது சொன்னார்கள் என்றால் கடன் வாங்குவதற்கு ஒரு நாள் முன்பு சொன்னார்கள் என்று சாட்சி கூறுகிறார். கடன் கொடுத்தற்கு கடனுறுதி சீட்டில் 4வது பிரதிவாதியிடம் நான் கையொப்பம் வாங்கவில்லை என்றால் சரிதான். 3 மற்றும் 4 பிரதிவாதிகள், 1வது பிரதிவாதி நிறுவனத்தின் பங்குதாரர்களாக உள்ளார்கள் என்று நான் ஆவணத்தை படித்து பார்க்கவில்லை, ஆனால் 3 மற்றும் 4 பிரதிவாதிகள் என்னிடம் சொன்னார்கள். 3வது பிரதிவாதி தந்த காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்த போது வங்கியிலிருந்து 3 மற்றும் 4 பிரதிவாதிகளின் வங்கி கணக்கு முடிக்கப்பட்டது என்று எனக்கு குறிப்பாணை வரவில்லை, வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்று சொல்லி தான் குறிப்பாணை வந்தது. நான் காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்த போது என்னுடன் செல்வராஜிம், காளிமுத்துவும் என்னுடன் வரவில்லை, நண்பர் ஒருவருடன் சென்றேன். அவர் பெயர் தாமோதரன். அவர் காரத்தொழுவு

ஊரைச்சேர்ந்தவர். இந்த வழக்கு விவரம் மேற்படி தாமோதரனுக்கு தெரியாது.

இரு தரப்பு வேண்டுகோளுக்கிணங்க மேலும் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN

Digitally signed by M NAMBIRAJAN
Date: 2025.11.12 14:37:43 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.